நே. சிற்றரசு தலைமை! எஸ்.மோகன் முன்னிலை!

## சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் வேண்டுகோள்!

*சென்னை, நவ.23-*

*சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :-*

*சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பாக முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவர்களுக்கான பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டி நடத்துவது குறித்தும் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டும் ஆலோசனைக் கூட்டம் இன்று (23.11.2023) மாலை 6.00 மணியளவில் காம்தார் நகர் 1வது தெரு, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது.*

*இதில் மாநில இணை செயலாளர் எஸ். மோகன் முன்னிலை வகிக்கிறார்.*

*ஆகவே இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட மாணவர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. மாணவர் அணி, மாவட்ட அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் அறிவித்துள்ளார்.*

நே.சிற்றரசு தலைமை! இரா.நரேந்திரன் முன்னிலை!

## சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ச.அசோக்குமார் வேண்டுகோள்!

*சென்னை, நவ.23-*


*சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அண்ணாநகர் ச.அசோக்குமார் விடுத்துள்ள அறிக்கை பின்வருமாறு :-*

*சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணி சார்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பேச்சுப் போட்டி நடத்துவது குறித்தும் மற்றும் கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டும் ஆலோசனைக் கூட்டம் இன்று 23.11.2023 மாலை 5.00 மணியளவில் காம்தார் நகர் 1வது தெரு, நுங்கம்பாக்கத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெறுகிறது. இதில் மாநில துணை செயலாளர் இரா. நரேந்திரன் முன்னிலை வகிக்கிறார்.*

*ஆகவே இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்ட பொறியாளர் அணியின் அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்



## முரசொலி மாறன்

**நவம்பர் 23 (2003)**

“திராவிட இயக்க முன்னோடி – கழகத்தின் தூண் – ஈடில்லா சிந்தனைச் செம்மல் – மாபெரும் ராஜதந்திரி – முரசொலியின் பிதாமகன் – கழகத்தின் மூளை – கலைஞரின் மனசாட்சி” என அடைமொழிகள் பலவற்றால் அன்பு தவழ அழைக்கப் பெற்றவர்.

தமது 35 ஆண்டு காலத்திற்கும் மேலான நாடாளுமன்ற அனுபவத்தால், நாடாளுமன்ற ஜனநாயக முறைகளை பழுதற உணர்ந்த, பேணிய பண்பாளர்.

மத்திய வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சராக திறம்பட பணியாற்றி பெரும்புகழ் பெற்றவர்.

எழுத்தாளராக, பத்திரிகையாளராக, திரைப்பட கதாசிரியராக, வசன கர்த்தாவாக, பாடலாசிரியராக, இயக்குநராக, தயாரிப்பாளராக பன்முகப் பரிமாணங்கள் கொண்டவர்.

நெருக்கடிநிலை காலத்தில் ஓராண்டு மிசா கைதியாக சிறையில் அதிகாரிகளின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலுக்கு ஆளானவர்.

தன் இறுதிக்காலம் வரை கழகத்திற்கோ, தலைவருக்கோ, கிஞ்சித்தும் மாற்றுக் கருத்தோ, துரோக சிந்தனையோ இல்லாமல் கழகமே மூச்சென பணியாற்றிய பண்பாளர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


தமிழ்நாடு அரசு

**தொழில் நுட்பக்கல்வித்துறை**

கலைஞர் 100 1924 - 2023

தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை - 600 025

**முன் தகுதி மின்னணு ஒப்பந்தப்புள்ளி எண்.38த.பொ/வ.அ.3/தொநுகவ/2023-24 நாள் : 21.11.2023**
**ஒப்பந்தப்புள்ளி படிவம் : மொத்த தொகை / விலை விகித முறை (இரு உறை முறை)**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் தலைமைப்பொறியாளர், பொபது, தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025 அவர்களால் பதிவு பெற்ற தகுதி வாய்ந்த பொதுப்பணித்துறை ஒப்பந்ததாரர்களிடமிருந்து மின்னணு முறையில் கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தங்கள் கோரப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | தோராய மதிப்பீடு (சரக்கு மற்றும் சேவை வரியுடன் ரூபாய் இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூபாய் மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதியான ஒப்பந்ததாரர் | முன் வைப்புத் தொகை மின்னனு முறையில் செலுத்த வேண்டிய செயற் பொறியாளர் |
|---|---|---|---|---|---|
| 1 | சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் தொழில் நுட்ப கல்லூரியில் 100 மகளிர்க்கான விடுதி கட்டும் பணி | 556.00 | 288000/- 13 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், மதுரை |
| 2 | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அரசு கலை மற்றும் அறிவியில் கல்லூரியில் 24 வகுப்பறைகள் கட்டும் பணி | 631.00 | 326000/- 13 மாதங்கள் | வகுப்பு 2 மற்றும் அதற்கு மேல் | செயற்பொறியாளர், பொபது தொழில் நுட்பக்கல்விக் கோட்டம், திருச்சி |

1. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், மின்னணு வழியாக ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அறிவுறுத்தல்கள் குறித்து **http://tntenders.gov.in** இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம். 2.ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பதிவேற்றம் செய்ய வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 27.12.2023 காலை 11.00 மணி வரை (மின்னணு முறை) (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 3.மின்னணு ஒப்பந்த புள்ளிகள் (முதல் உறை) திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 28.12.2023 காலை 11.30 மணி அளவில் (சர்வர் சிஸ்டம் கடிகாரம்) 4.மின்னணு ஒப்பந்தப்புள்ளி கலந்துகொள்ள மின்னணு கையொப்பம் கட்டாயமாகும். ஒப்பந்தப்புள்ளி விவரங்களில் ஏற்படும் மாற்றங்கள் – திருத்தம் மேற்காணும் இணைய தளத்தில் மட்டுமே வெளியிடப்படும்.

**தலைமைப் பொறியாளர்,** பொபது., தொழில் நுட்பக் கல்வி வட்டம், சென்னை – 600 025.

செ.ம.தொ.இ/6155/ஒப்பந்தப்புள்ளி/2023



**தமிழ்நாடு அரசு, பொதுப்பணித்துறை**
**கட்டடம் (க & ப ) வட்டம் தஞ்சாவூர். இன விலை முறை**

கலைஞர் 100 1924 - 2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 16/க.பொ/க (க & ப) வட்டம். தஞ்சாவூர் /2023-2024/ நாள்.21.11.2023**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை கட்டடம் (க & ப ) வட்டம், தஞ்சாவூர்-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து ஒரு பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1) கடலூர் மாவட்டத்தில் ஒரு பணிக்கான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு **https://tntenders.gov.in** என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| | | |
|---|---|---|
| 2 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் கிடைக்கப்பெறும் நாள் | 24.11.2023 முதல் 11.12.2023 மாலை 3.00 மணி வரை. |
| 3 | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் இணையதளத்தில் சமர்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | 11.12.2023 மாலை 3.00 மணி வரை. |
| 4 | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலமாக திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 12.12.2023 மாலை 3.00 மணி |

5) விலை மாறுதல் கூறு (Price Adjustment Clause) இப்பணிக்கு பொருந்தும்

**கண்காணிப்பு பொறியாளர், பொபது (கூ/பொ)**
**கட்டட (க & ப) வட்டம், தஞ்சாவூர்- 1.**

**செ.ம.தொ.இ / 6189/ ஒப்பந்தப்புள்ளி /2023**





23-11-2023
20 ஆம் ஆண்டு நினைவு நாள்

**அண்ணாவின் அறிவுத் திருவிளக்கே!**

**கலைஞரின் மனசாட்சி மாணிக்கமே!**

**படை நடத்தும் “இளம் தென்றல்” படைத்திட்ட பவளவிழா கண்டீரோ!**

**மாலையும் கழுத்துமாய் மலைபோல நின்றீரோ!**




இவண்
**இராணிப்பேட்டை ஆர்.காந்தி**
கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
மாவட்ட செயலாளர்

## இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.